# பத்தாம் வகுப்பு அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2013-14

## தமிழ் முதல் தாள் விடைக்குறிப்பு

**மொத்த மதிப்பெண்கள்: 100**

| | | |
|---|---|---|
| | **பிரிவு - I** | மதிப்பெண்கள் : 20 |
| | **பகுதி - 1** | |
| | **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | 6x1=6 |
| 1 | ஆ) குறள் | 1 |
| 2 | இ) பாரதியார் | 1 |
| 3 | ஆ) ஆறு | 1 |
| 4 | இ) சொத்துரிமை | 1 |
| 5 | ஆ) பாரத ரத்னா | 1 |
| 6 | இ) பேச்சுக்கலை | |
| | **பகுதி - 2** | |
| | கோடிட்ட இடத்தை நிரப்புக. | 6x1=6 |
| 7 | நெற்கதிர் | 1 |
| 8 | பெரியபுராணம் | 1 |
| 9 | வரப்புகளாக | 1 |
| 10 | வேடிக்கையாக | 1 |
| 11 | தொங்குதல் | 1 |
| 12 | சிரவணபிதுர்பத்தி | 1 |
| | **பகுதி - 3** | |
| | பொருத்துக. | 4x1=4 |
| 13 | நிலவு | 1 |
| 14 | காடு | 1 |
| 15 | மூங்கில் | 1 |
| 16 | குப்பைகூளம் | 1 |
| | **பகுதி - 4** | |
| | விடைக்கேற்ற வினா அமைக்க ( வினா சரியாக அமைத்து இருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 4x1=4 |
| 17 | இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் எத்தனை? | 1 |
| 18 | தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள் | 1 |
| 19 | சுமரச சுத்த சன்மார்க்க சங்கம் எங்கு நிறுவப்பட்டது? | 1 |
| 20 | எங்கு பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன? | 1 |
| | பிரிவு - II | மதிப்பெண்கள் : 20 |
| | பகுதி - 1 | |
| | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி | 5x2=10 |
| 21 | 1. என்றும் இடும்பைத் தருவது தீயொழுக்கம்.<br>2. காரணம் தீயொழுக்கம் உடையோர் பெரும் பழியை அடைவர் | 1<br>1 |
| 22 | 1. ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றினால் ஆன மருந்துப்பொருளுக்கு ஏலாதி என்று பெயர்<br>2. இம்மருந்து உண்பவரின் உடல்பிணியைப் போக்குவது போல இந்நூலின் ஆறு கருத்துகள் கற்போரின் அறியாமையைப் போக்கும் | 1<br>1 |
| 23 | அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது. | 2 |
| 24 | 1. குகன் தன் கரிய தலைமுடி மண்ணில் படிய வணங்கினான்.<br>2. எழுந்து அடக்கமாய் கையால் வாய்பொத்தி உடல் வளைத்து நின்றான். | 1<br>1 |
| 25 | வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா | 4x½=2 |
| 26 | 1. ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும்<br>2. மதிக்குமாறு செய்வது பொருள். | 1<br>1 |
| 27 | பண்பெனப்படுவது சான்றோர் வழி அறிந்து நடத்தல் | 2 |
| | பகுதி - 2 | |
| | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி | 5x2=10 |
| 28 | 1. ஒரு மொழிப் படத்தை<br>2. மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறை. | 1<br>1 |
| 29 | 1. இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளை உடையது.<br>2. இலக்கண இலக்கிய வளமுடையது.<br>3. வாழ்வியலுக்கு அகம், புறம் என இலக்கணம் வகுத்தது.<br>4. திருக்குறள் மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை | 4x½=2 |

| | | |
|---|---|---|
| | வகுத்தளித்துள்ளது. | |
| 30 | மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது<br>அற்றது போற்றி உணின். | 2 |
| 31 | 1. பட்டினப்பாலை, 2. மதுரைக்காஞ்சி | 2 |
| 32 | 1. அன்பு 2. உண்மை 3. உறுதி 4. இன்னா செய்யாமை | 4x½=2 |
| 33 | 1. கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், மருதூர்<br>2. 05.10.1823 | 1<br>1 |
| 34 | மேனிலைக் கல்வி (12ஆம் வகுப்பு) | 2 |
| | **பிரிவு - III** | மதிப்பெண்கள் : 24 |
| | **பகுதி - 1** | |
| | எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி | 3x4=12 |
| 35 | 1. கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை – அல்லள்<br>2. உள்ளத்தில் தீராத பகையும், சினமும் கொண்டவள்<br>3. ஒற்றைச் சிலம்பை கையில் ஏந்தியுள்ளாள்.<br>4. கணவனை இழந்தவள். | 1<br>1<br>1<br>1 |
| 36 | 1. குகன் அன்புடன் கொண்டுவந்த தேனும், மீனும் அமுதத்தைவிடச் சிறந்தது, தூய்மையானது.<br>2. நாங்கள் விரும்பி ஏற்றுக்கொண்டு உண்டதற்கு சமம். | 2<br>2 |
| 37 | 1. பொன், பவளம், முத்து, மாணிக்கம் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தாலும் மாலையாக கோர்த்து அணிகலன் அமைக்கும்போது அழகாகிறது.<br>2. அதுபோல சான்றோர், என்றும் சான்றோர் பக்கமே இருப்பர். | 2<br>2 |
| 38 | 1. தன் வாலை வளைத்தது 2. பெரிய தலையை தாழ்த்தியது<br>3. உடல் நடுக்கமுற்றது 4. பையப்பைய நடந்து வந்து நபிக்கு வணக்கம் சொல்லியது | 4x1=4 |
| 39 | 1. ஒரு செடியின் வெற்றி நல்ல பூவினை கொடுப்பதில் உள்ளது.<br>2. அப்பூவினை கொடுக்கும்வரை ஓய்வெடுப்பதில்லை.<br>3 அதுபோல இலட்சியத்தினை அடையும் வரை இடையூறுகளைக் கண்டு தயங்கக்கூடாது.<br>4. தடைகளை எதிர்க்கொண்டு தொடர்ந்து முயன்றால் சாதனைப் பூக்களை அடையலாம். | 1<br>1<br>1<br>1 |
| | **பகுதி - 2** | |
| | எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி | |
| 40 | 1. பெண்கள் உரிமைப் பெற்று புது உலகை படைக்க வேண்டும்.<br>2. ஆணுக்கு இளைத்தவர்கள் அல்லர்<br>3. ஆண்கள் பெண்களை படிக்க வைக்க வேண்டும்.<br>4. கணவருக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருத்தல் கூடாது.<br>5. சமுதாயத்திற்கு தொண்டாற்றும் பெண்களாய் திகழ வேண்டும்.<br>6. பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும் | 4x1=4 |
| 41 | 1. கேட்போரை தன்வயப்படுத்த வேண்டும்<br>2. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும்.<br>3. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்.<br>4. இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தொடக்க உரை அமைதல் நன்று. | 1<br>1<br>1<br>1 |
| 42 | 1. தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிரான கறுப்புச் சட்டங்களை கொளுத்தினார்.<br>2. சிறையில் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.<br>3. சிறையில் செருப்பு தைத்தார். அதை சிறையில் அடைத்த ஸ்மட்ஸ் என்பவருக்கு பரிசாக வழங்கினார்.<br>4. இன்னா செய்தாருக்கும் இனியவையே செய்ய விரும்பினார். | 1<br>1<br>1<br>1 |
| 43 | 1. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - திருக்குறள்.<br>2. உழுது பயிர் செய்து உலகை காக்கும் உழவுத் தொழிலையே பெரிதும் போற்றினர்.<br>3. உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – தமிழரால் போற்றப்படுகிறது.<br>4. உழவுக்கு சிறப்புப்பெற்ற மருத நிலம் வயலும் வயல் சார்ந்த நிலமாக கருதப்பட்டது. | 1<br>1<br>1<br>1 |
| 44 | 1. 1908 - எல்பின்ஸ்டன் பள்ளி – உயர்நிலைப் பள்ளி<br>2. 1912 - எல்பின்ஸ்டன் கல்லூரி - இளங்கலைப் பட்டம்<br>3. 1915 - கொலம்பியா பல்கலைக் கழகம் - முதுகலைப் பட்டம்<br>4. 1916 - லண்டன் - பொருளாதாரம் - முனைவர் பட்டம் | 1<br>1<br>1<br>1 |
| | **பிரிவு - IV** | மதிப்பெண்கள் : 10 |
| 45 | பாடல் வினா – விடை<br>1. தமிழ் விடு தூது<br>2. இயல், இசை, நாடகம்<br>3. தித்திக்கும் - முத்தி : உண்ணப்ப - விண்ணப்ப<br>4. உன்னோடு + உவந்து + உரைக்கும்<br>5. கூறுவதை கேட்பாயாக | 5<br>1<br>1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 46 | பத்தி வினா – விடை<br>1. தமிழர்கள் 2. பொன், மணி, முத்து, துகில்<br>3. கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து 4. யானைத் தந்தம், மயில் தோகை<br>5. கடல் வாணிகம் | 5<br>5x1=5 |
| | **பிரிவு - V** | |
| | **பகுதி - 1** | மதிப்பெண்கள் : 26 |
| | **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்** | 2x8=16 |
| 47 | அ. கண்ணகிக்கும் பாண்டிய மன்னனுக்கும் நடந்த சொற்போர் உரையாடல்<br>பாண்டியன்: கையில் சிலம்பும் கண்ணில் நீருமாய் என் முன்னே வந்து நிற்கும் பெண்ணே நீயார்?<br>கண்ணகி: ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், பசுவின் துயரத்தைப் போக்கிய மனுநீதிச் சோழனும் வாழ்ந்த புகார் நகரமே நான் பிறந்த ஊர். மாசாத்துவான் மகனை மணம் புரிந்தேன். ஊழ்வினைக் காரணமாக மதுரைக்கு வந்து என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயர்.<br>பாண்டியன்: கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று. அது அரச நீதியே ஆகும்.<br>கண்ணகி : அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது.<br>பாண்டியன் : நல்லது. எம்முடைய சிலம்பின் பரல்கள் முத்துக்களே!<br>(கண்ணகி சிலம்பினை உடைத்தல் - மாணிக்கப் பரல்கள் மன்னர் முகத்தில் பட்டு தரையில் விழுதல்)<br>பாண்டியன் : அந்தோ! என் குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது. நீதி தவறிய யானோ அரசன்? யானே கள்வன். என் ஆயுள் கெடுவதாக.<br>(மன்னன் மயங்கி விழுந்து உயிர் துறக்கிறான்.) | 1<br>2<br>1<br>1<br>1<br>1<br>1 |
| | (அல்லது) | |
| | ஆ. வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்:<br>1. இல்வாழ்கை எனப்படுவது வறுமையில் வாடுவோருக்கு உதவுதல்.<br>2. காத்தல் எனப்படுவது உடன் வந்தவரை பிரியாதிருத்தல்.<br>3. பண்பெனப்படுவது உலக நிலை அறிந்து நடத்தல்.<br>4. அன்பெனப்படுவது சுற்றத்தாரிடம் சினம் கொள்ளாதிருத்தல்.<br>5. அறிவெனப்படுவது அறிவற்றோர் கூறும் சொற்களைப் பொருத்தல்.<br>6. உறவெனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்தல்.<br>7. நிறையெனப்படுவது மறைக்க வேண்டியவற்றை பிறர் அறியாமல் காத்தல்.<br>8. நீதி எனபப்படுவது வேண்டியவர் என இரங்காதிருத்தல். | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| 48 | அ. அம்பேத்கரின் அரும்பணிகள்<br>1. 1927 - மராட்டிய மகாத்துக்குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம்.<br>2. இந்தியாவிற்கு முழுமையான விடுதலையுடன் தன்னாட்சித் தகுதியை வழங்கவேண்டும்.<br>3. 1930. வட்டமேசை மாநாட்டில் அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினராய் கலந்துக்கொள்ளல்.<br>4. 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். மும்பையில் சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் தொடங்குதல்.<br>5. இந்தியாவின் தேசிய பங்குவீதம் என்னும் நூல் பொருளாதாரத்தில் சிறந்த நூலாகக் கருதப்பட்டது.<br>6. சமுதாயம் என்னும் மரத்தின் வேர்களை சாதிப்புழுக்கள் அரித்துவிடாமல் தடுக்கும் நச்சுக்கொல்லி மருந்தாய் விளங்கினார்.<br>7. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை தனியாளாய் செயல்படுத்தினார்.<br>8. இதன் அடிப்படையில் இந்தியா முழுமையான குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| | (அல்லது) | |
| | ஆ. கலை அறிவியல் கல்வி, சிறுதொழிற்கல்வி<br>கலை அறிவியல் கல்வி<br>1. மேனிலைக் கல்வியின் தேர்ச்சிக்குப் பின் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியல், விலங்கியல், தாவரவியல், வரலாறு முதலிய பிரிவுகளில் பட்டம் பெற வேண்டும்.<br>2. பாடங்களுக்கு ஏற்ப இளங்கலைப் பட்டம், இளம் அறிவியல் பட்டம் என்று அழைக்கப்படுகின்றன.<br>3. கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளம் கல்வியியல் பட்டம் பெற வேண்டும்.<br>4. போட்டித் தேர்வு அல்லது வேலை வாய்ப்புத் துறை பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் பணியைப் பெறலாம்.<br>சிறுதொழில் கல்வி:<br>1. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெறலாம். | 1<br>1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | 2. கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர், தச்சர் படிப்புகளும், இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணிணி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் படிக்கலாம்.<br>3. சுயதொழில் தொடங்குவதற்கு வழிகாட்டுதல்கள், பயிற்சிகள், கடன் உதவிகளை அரசு அளிக்கிறது.<br>4. மனத்துணிவும் முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வேலைக்காகக் காத்திருக்கத் தேவையில்லை. | 1<br><br>1<br><br>1 |
| | பகுதி - 2 | |
| | செய்யுள் வடிவில் விடை | |
| 49 | அ. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்<br>என்றும் இடும்பை தரும். | 2 |
| | ஆ. இடிப்பரை இல்லாத ஏமரா மன்னன்<br>கெடுப்பார் இலானுங் கெடும். | 2 |
| | இ. மீனோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்<br>பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்<br>தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்<br>கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே | 6 |

முதன்மைக் கல்வி அலுவலர்
கிருட்டினகிரி.

# பத்தாம் வகுப்பு அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2013-14
## தமிழ் இரண்டாம் தாள் விடைக்குறிப்பு

**மொத்த மதிப்பெண்கள்: 100**

| | | |
|---|---|---|
| | **பிரிவு - I** | மதிப்பெண்கள் : 20 |
| | **பகுதி - 1 உரிய விடை** | 5x1=5 |
| 1 | ஈ) ஜகாரக்குறுக்கம் | 1 |
| 2 | ஆ) வைகை | 1 |
| 3 | ஈ) கதிர்வேல் வெற்றிலை தின்றான் | 1 |
| 4 | இ) இந்திரன் | 1 |
| 5 | ஆ) ஏகாரத்தில் | 1 |
| | பகுதி - 2 கோடிட்ட இடம் | 5x1=5 |
| 6 | இரட்டுற மொழிதல் அணி | 1 |
| 7 | உற்றதுரைத்தல் | 1 |
| 8 | வாகைப்பூ | 1 |
| 9 | உறழ | 1 |
| 10 | மேல் நாடு (அ) மேனாடு | 1 |
| | பகுதி - 3 சுருக்கமாக விடையளி | 10x1=10 |
| 11 | வல்லினம் மிகா இடங்கள் சரியாக இருப்பின் மதிப்பெண் அளிக்கலாம் (ஒன்றனுக்கு மட்டும்) | 1 |
| 12 | படித்த | 1 |
| 13 | என்னே! குறிஞ்சித்தேனின் சுவை! (அ) குறிஞ்சித் தேனின் சுவைதான் என்னே! | 1 |
| 14 | இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றனர்** | 1 |
| 15 | கை**த்**தொழில் ஒன்றை**க்** கற்று**க்**கொள். | 1 |
| 16 | இவ்வழியே புண்ணியப் பயணம் செல்லுங்கள். | 1 |
| 17 | மிளகாய் வற்றல் கிலோ என்ன விலை? | 1 |
| 18 | சுட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும். | 1 |
| 19 | ரிக், யசூர், சாமம், அதர்வணம். | 1 |
| 20 | வேலை போய்விட்டது. | 1 |
| | **பிரிவு - II** | மதிப்பெண்கள் : 10 |
| | **எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | 5x2=10 |
| 21 | பகுபத உறுப்பிலக்கணம்<br>மகிழ்ந்தான் - மகிழ் + த்(ந்) + த் + ஆன்.<br>மகிழ் - பகுதி<br>த் - சந்தி<br>ந் - த் - ந் ஆனது விகாரம்<br>த் - இறந்த கால இடைநிலை<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 22 | 1. சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரை அளவினதாய் குறைந்து ஒலிப்பது.<br>2. சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வாராது எ.கா.ஔவை | 1<br>1 |
| 23 | கருங்குயில் = கருமை + குயில்<br>கரு + குயில் - ஈறுபோதல்<br>கருங்குயில் - இனமிகல் | 1<br>1 |
| 24 | வினா ஆறு வகைப்படும். அவை,<br>1. அறிவினா 2.அறியாவினா 3.ஐயவினா 4. கொளல்வினா 5.கொடைவினா 6. ஏவல்வினா | ½<br>1½ |
| 25 | சொற்கள் இரண்டு மூன்று நான்கு முறை அடுக்கி வந்து பொருள் தருவது.<br>எ.கா. தீ தீ தீ | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 26 | 1. நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்<br>2. பொழுது - கார்காலம், மாலை | 1<br>1 |
| 27 | 1. பாடு + ஆண் + திணை = பாடாண்திணை<br>2. பாடப்படும் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது | 1<br>1 |
| | **பிரிவு - III** | மதிப்பெண்கள் : 50 |
| | **பகுதி - 1 (இரண்டனுக்கு மட்டும் விடையளி)** | 2x5=10 |
| 28 | 1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.<br>2. இயற்சீர் வெண்சீர் வரும்<br>3. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்<br>4. ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும்.<br>5. செப்பலோசை பெற்று வரும். இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும். | 1<br>1<br>1<br>1<br>1 |
| 29 | 1. இப்பாடலில் பயின்று வரும் அணி சொற்பொருள் பின் வரு நிலையணி<br>2. செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.<br>3. இப்பாடலில் தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. | 1<br>2<br>2 |
| | (அல்லது) | |
| | வஞ்சப் புகழ்ச்சி அணி<br>1. ஒருவரைப் பழிப்பது போல புகழ்வதும் புகழ்வது போல பழிப்பதும்<br>2. எ.கா. தேவர் அனையர் . . . . லான்<br>3. இப்பாடலில் தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவது போல கூறித் தீயவர்கள் தம் மனம்போனப் போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது. | 2<br>3 |
| 30 | அலகிடல் | |

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு | மதிப்பெண் : 5 |
|---|---|---|---|---|
| 1 | ஊக்/கம் | நேர் நேர் | தேமா | 2 |
| 2 | உடை/யான் | நிரை நேர் | புளிமா | |
| 3 | ஒழுக் /கம் | நிரை நேர் | புளமா | |
| 4 | பொரு/தகர் | நிரை நிரை | கருவிளம் | 2 |
| 5 | தாக் /கற் /கு | நேர் நேர் நேர் | தேமாங்காய் | |
| 6 | பே/ருந் | நேர் நேர் | தேமா | |
| 7 | தகைத்து | நிரைபு | பிறப்பு | 1 |

| | | |
|---|---|---|
| | **பகுதி - 2 (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** | 2x5=10 |
| 31 | முன்னுரை | 1 |
| 32 | பொருளுரை | 3 |
| 33 | முடிவுரை | 1 |
| | பகுதி - 3 | 3+2=5 |
| 34 | ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. | |
| | அ. என்ன நிகழ்ந்தது, தாமதமாக, போக்குவரத்து நெரிசல், தாமதம், பேருந்து, பயணச்சீட்டு, பேருந்து 10.30 க்கு, கடந்த வாரமே முன்பதிவு | 3 |
| | ஆ. அரபு எண்களைத் தமிழ் எண்ணாக மாற்றுக.<br>100 - ௧00 120 - ௧௨0 150 - ௧௫0 170 - ௧௭0 | 4 x½=2 |
| 35 | ஆங்கில உரைப் பகுதிக்குத் தமிழாக்கம். | 3+2=5 |
| | அ.<br>1. பள்ளிகள், மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்றுத் தருவதோடு, அதற்கு மேலும் அதிகம் செய்கின்றன.<br>2. பள்ளிகளில் மாணவர்கள் நல்ல பழக்கங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள்.<br>3. மாணவர்கள் முறையான வழிகளில் நடக்கவும், தவறு செய்யும் போது | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | திருத்தப்படுகிறார்கள் | |
| | ஆ தமிழ் பழ மொழிகள் (இரண்டனுக்கு மட்டும்)<br>1. முயற்சித் திருவினையாக்கும்<br>2. கல்வி கரையில, கற்பவர் நாள்சில<br>3. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.<br>4. செய்யும் தொழிலே தெய்வம். | 2x1=2 |
| | பகுதி - 4 | மதிப்பெண்கள்: 5 |
| 36 | ஒன்றனுக்கு மட்டும் | 1x5=5 |
| | அ. பொருத்தமான சூழலில் எழுதியிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம் (அ)<br>ஆ. பொருத்தமான கவிதையாக எழுதியிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம் | |
| | பகுதி - 5 | மதிப்பெண்கள்: 5 |
| 37 | பாநயம் பாராட்டல் | 1x5=5 |
| | **திரண்ட கருத்து:**<br>மக்களிடையே அன்புநெறி வளர்வதற்கும், விரிந்த மனப்போக்கு ஏற்படுவற்கும், தன்னல நோக்கு தகர்வதற்கும், எல்லோரும் ஓரினத்தவர் என்று உணர்வதற்கும், உயர் எண்ணங்கள் உருவாவதற்கும், புனிதமுற்று மக்கள் வாழ்வதற்கும், நாட்டில் புத்தகசாலை தோன்ற வேண்டும். | 1 |
| | **பொருள் நயம்:**<br>“மக்கள் புனிதமான வாழ்வு வாழ, அன்பு விரிந்த மனப்பான்மை, தன்னலமின்மை, ஓரினம் என்று உணர, உயர் எண்ணம் உருவாக நாடெங்கும் புத்தகசாலை வேண்டும்” என்கிறார் பாரதிதாசனார்.; | 1 |
| | **மோனை:** முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.<br>சான்று : மனிதரெலாம் ….. மனோபாவம்<br>இனிதினிதாய் ….. இலகுவது<br>புனிதமுற்று ….. புத்தகசாலை | 1 |
| | ✠ **எதுகை:** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை<br>சான்று : மனிதரெலாம்_தனிமனித_இனிதினிதாய்_புனிதமுற்று | 1 |
| | ✠ **இயைபு:** இறுதி எழுத்தோ,அசையோ, சீரோ ஒன்றுபட்டு வருவது இயைபு<br>சான்று : காண்பதற்கும் …… உணர்வதற்கும் | 1 |
| | பகுதி - 6 | மதிப்பெண்கள்: 5 |
| 38 | வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல் | 1x5=5 |
| | 1. தேதி | ½ |
| | 2. கிளை | ½ |
| | 3. இடம் | ½ |
| | 4. கணக்கு எண் | 1 |
| | 5. பெயர் | ½ |
| | 6. உரூபாய் | 1 |
| | 7. பண விவரம் | ½ |
| | 8. கையொப்பம் | ½ |
| | பகுதி - 7 | மதிப்பெண்கள்: 5 |
| 39 | வாழ்வியல் சூழல் | 3+2=5 |
| | அ. 1.தமிழரசனைப் போல் இருப்பது நல்லது. | 1 |
| | 2. நட்புடன் பழக வேண்டும். பிறருக்கு உதவிகள் செய்ய வேண்டும். | 1 |
| | 3. உண்டு. 15 பேர் | 1 |
| | ஆ. 1. சரியே | 1 |
| | 2. நல்ல பழக்க வழக்கங்கள், பண்புகள் நிறைந்தவர்களுடன் நட்புக் | 1 |

| | | |
|---|---|---|
| | கொள்ள வேண்டும். | |
| | பிரிவு - IV | |
| | பகுதி - 1 | மதிப்பெண்கள்: 10 |
| 40 | கடிதம் (ஒன்றனுக்கு மட்டும்)<br>அ. வரவேற்பு மடல்<br>1. இடம்<br>2. பள்ளியின் பெயர்<br>3. தமிழறிஞரின் பெயர்<br>4. விளித்தல்<br>5. செய்தி<br>6. இப்படிக்கு<br>7. இடம், தேதி | 1x10 =10<br><br>1<br>1<br>1<br>4<br>1<br>1<br>1 |
| | ஆ. போக்குவரத்து வசதி<br>1. அனுப்புநர்<br>2. பெறுநர்<br>3. விளித்தல்<br>4. பொருள்<br>5. செய்தி<br>6. இப்படிக்கு<br>7. இடம் தேதி<br>8. முகவரி | 1<br>1<br>½1<br>4<br>1<br>½<br>1<br>1 |
| | பகுதி - 2 | மதிப்பெண்கள்: 10 |
| 41 | கட்டுரை (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) | 1x10 =10 |
| | அ. (அ) ஆ.<br>தலைப்பு<br>முன்னுரை<br>பொருளுரை<br>உட்தலைப்புகள்<br>முடிவுரை | <br>1<br>1<br>5<br>2<br>1 |

முதன்மைக் கல்வி அலுவலர்
கிருட்டினகிரி